# கல்விவளங்கள் செயற்றிட்டம்
# ஆண்டறிக்கை
# **2020/2021**

| | |
|---|---|
| செயற்றிட்டத் தலைப்பு | கல்விவளங்கள் செயற்றிட்டம் |
| செயற்றிட்ட எண் | NF/GP/2020/0009 |
| செயற்றிட்ட இடம் | இலங்கை |
| செயற்றிட்டக் காலம் | ஆகஸ்ட் 2020 - மார்கழி 2021 |
| நிறைவேற்றும் அமைப்பு | நூலக நிறுவனம் |
| புரவலர் அமைப்பு | Face |
| முக்கிய பங்குத்தாரர்கள் | அதிபர்கள், ஆசிரியர்கள், பாடசாலைகள், ஆவணச் சேகரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் |
| செயற்றிட்டச் செலவுகள் | 2020 - LKR 344,810.03<br>2021 - LKR 585,523.82 |

நூலக நிறுவனம், 2012 - 2013 காலப் பகுதியில் இ-பள்ளிக்கூடம் எனும் முன்னோடிச் செயற்றிட்டத்தின் ஊடாக கல்விவளங்கள் சார் ஆவணங்களை ஆவணப்படுத்தியது. அதன் தொடர்ச்சியாக 2019 ஆம் ஆண்டு கல்விவளங்கள் ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்தினுடாக வடக்கு மாகாண பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் மற்றும் திணைக்களங்கள் ஊடாக பரிட்சை வினாத்தாள்கள் ஆவணப்படுத்தப்பட்டன.
இந்தப் பின்புலத்தில், 2020 திறந்த கல்வி வளங்கள் செயற்திட்டமானது, இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் கல்வி சார் முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும் வண்ணம் முன்னெடுக்கப்பட்டது. பாடசாலைகளிலே மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தற் செயன்முறைகளுடன் தொடர்பான ஆவணங்களைச் சேகரித்து, ஆவணப்படுத்தி அவற்றை இணையத் தளம் வழியாக பாடசாலை சமூகம் மற்றும் அனைவருக்கும் பயன்தரும் வகையில் வெளியிடுதல் எமது சமூகங்களின் கல்வி சார் முயற்சிகளுக்கு உறுதுணையாக அமையும். அவ்வகையில் நூலக நிறுவனம் முன்னெடுக்கும் செயற்பாடுகளில் ஆவணப்படுத்தலின் ஓர் பகுதியாக பாடசாலைகளின் கல்வி வளங்கள் சார் ஆவணங்களைப் பெற்று அவற்றை எண்ணிமப்படுத்தி ஆவணப்ப்டுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பாடசாலைக் கல்வியுடன் தொடர்பான வளங்கள் தற்சமயம் இணைய வடிவில் வெவ்வேறு தளங்களிலே சிதறிக் கிடக்கின்றன. அவற்றினை, அனுமதி பெற்று, நூலகச் சீர்தரங்களுக்கு ஏற்ப ஒழுங்குபடுத்தி விபரித்து ஒரு தளத்துக்குக் கொண்டு வந்து, வகுப்பு ரீதியாகவும், பாட ரீதியாகவும் பகுத்து மாணவர்களின் பாவனைக்காக விடுவது இந்தச் செயற்றிட்டத்தின் ஒரு நோக்கமாகும்.

இதனுள் அடங்கும் ஆவணங்களாக கல்வித் திணைக்களத்தினால் வெளியிடப்படும் பாடத்திட்டங்கள், ஆசிரியர் கையேடுகள், மாதிரி வினாத்தாள்கள் என்பவற்றுடன், பரீட்சைத் திணைக்களத்தினால் கடந்த காலங்களிலே நடாத்தப்பட்ட வினாத்தாள்கள் மற்றும் புள்ளித்திட்டங்களும் அமையும். அத்துடன் பாடசாலைகளிலே கல்விச் செயற்பாட்டுக்காக உருவாக்கப்படும் செயல் அட்டைகள், பயிற்சிகள், ஒலி மற்றும் ஒளிப்பதிவு முயற்சிகளும் இந்தச் செயற்றிட்டத்தினால் உள்வாங்கப்பட்டுள்ளன

அடைவுகள் **2020**

.

| | மாதங்கள் | எண்ணிமப்படுத்தப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை | பக்கங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆகஸ்ட் | 160 | 2236 |
| 2 | செப்டம்பர் | 849 | 11784 |
| 3 | ஒக்டோபர் | 740 | 7530 |
| 4 | நவம்பர் | 535 | 10117 |
| 5 | டிசம்பர் | 449 | 9866 |
| | மொத்தம் | **2733** | **41533** |

அடைவுகள் **2021**

| | | | |
|---|---|---|---|
| | ஜனவரி | 330 | 7601 |
| | பெப்ரவரி | 339 | 11244 |
| | மார்ச் | 346 | 10348 |
| | ஏப்ரல் | 381 | 1800 |
| | மே | 78 | 5730 |
| | யூன் | 552 | 5600 |
| | யூலை | 452 | 7097 |
| | ஆகஸ்ட் | 286 | 1210 |
| | செப்டம்பர் | 435 | - |
| | ஒக்டோபர் | 378 | 230 |
| | நவம்பர் | 280 | 2683 |
| | டிசம்பர் | 719 | 7418 |
| | மொத்தம் | **5128** | **61039** |

எதிர்கொண்ட சவால்கள்

- இவ்வாண்டில் கோவிட் 19 காரணமாக அதிகமாக அடைவுகள் சார்ந்த விடயங்களை எட்டுவது கடினமாக அமைந்தது. குறிப்பாக மூன்று மாதங்கள் முழுமையாக வேலைகளை தொடர முடியாத நிலைமை காணப்பட்டது.
- புதிய அலுவலக இடமாற்றம் ஓர் சவாலான காரணியாக அமைந்தது.
- நூலக நிறுவனத்தின் தற்போதைய ஊழியர்கள் எண்ணிக்கையைக் கொண்டு குறிப்பிட்ட அளவு ஆவணங்களையே எண்ணிமப்படுத்த முடிந்தமை. .
- புதிய கருவிகளை, உபகரணங்களை வினைத்திறனோடு கையாள்வதில்.ஏற்பட்ட சிக்கல்கள்.
- புதிய பணியாளர் மாற்றங்கள்
- போதியளவான ஆவணங்களை பெற முடியாமல் இருந்தமை.

கற்றல்களும் பரிந்துரைகளும்

- இத்திட்டத்திற்கான எண்ணிமப்படுத்துவதற்கான இன்னொரு ஊழியர் நியமிக்கப்படலாம்.
- பொருத்தமான கருவி உபகரணங்களைப் போதிய அளவில் கொள்வனவு செய்யப் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.
- ஊழியர்களுக்கு மேலதிக பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.
- ஆவணச் சேகரிப்பிலும் எண்ணிமப்படுத்துவதிலும் எத்தகைய ஆவணங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதற்கான திட்டமிடல்கள் அவசியம். கல்வி வளங்களை சார்ந்த வரையறையை மேலும் விரிவுபடுத்தல்.
- ஆவணகத்திலுள்ள பெயரிடல், சேகர ஒழுங்குபடுத்தல் முழுமைப்படுத்தப்பட வேண்டும்
- தன்னார்வலர்களை இணைத்து ஏனைய பிராந்தியம் விடயங்களை உள்ளீர்த்தல் .

பின்னிணைப்பு

திறந்த கல்வி வளங்கள்